ஓம் தத் ஸத்.

ஏகமேவாத்விதீயம்.

தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௭வரு மார்ச்சிமீ ௧௫௨. [இல. ௧௧.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம, ப்ராஜ்ஞோஸ்மீதி ஜ்ஞாதம், தமேதா யஜ்ஞம் த்வாந்தம் த்வாம் ப்ரவேதாஸ்யம் பகதவித்யாம் ப்ரதாவஸ்துஸுவதி, ஸுமேய தமேவம் வேவாவியதி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

விஷய அட்டவணை.

		பக்கம்.
௧.	கடவுள்துதி	௧௯௧
௨.	விளம்பரங்கள்	௧௯௨
௩.	தத்துவபோதினி	௧௯௩
௪.	மநுநூல்	௧௯௬
௫.	பிராம்மதருமம்	௧௯௭
௬.	உபநிஷத்து	௧௯௮
௭.	உபந்நியாஸம்	௧௯௮
	திருபங்கள்.	
௮.	பட்டுக்கோட்டைபிரமசபை	௨௦௧
௯.	தஞ்சைநகர்தர்மசபை	௨௦௨
௰.	தர்மசபையார்க்கோர்விடை	௨௦௪
௧௧.	இதிஹாஸகல்பனை	௨௦௫

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

என்னென்போமெம்மதியை - பரமனே - ஏதென்போமெம்விதியை.

அநுபல்லவி.

உன்னைநினையாதே - யொழித்தோமெம்வாழ்நாளை,
மன்னும்வழியறியா - மயங்கலானோமிவ்வேளை.........(என்)

சரணங்கள்.

க. அன்னையாயெங்களை - யன்போடெடுத்தணைத்து,
துன்னியதுயர்களை - த்துடைத்தின்பந்தருவித்து,
நன்னெறிதனிற்செல்ல - நாடோறுங்கற்பித்து,
சொன்னநன்றிமறந்து - சுத்தப்பாவிகளானோம்.........(என்.)

உ. எல்லாம்படைத்தளித்த - வல்லவனிருக்க,
பொல்லாவர்ச்சைகளையே - போற்றியலைந்தோமே,
சொல்லவரிதாமுன்றன் - சுவரூபத்தைபுணராமல்,
பல்லூழிகாலமும் - பாமரரானோமே....................(என்.)

ங. சத்தியமுந்தருமமும் - சாற்றித்திரியாமல்,
நித்தியத்துவமருளும் - நின்செயல்புரியாமல்,
புத்தியின்றிவெளிவேடம் - பூண்டதனிற்பயனும்,
முத்தியுங்கிடைக்குமென - மோசம்போகலானோமே...(என்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருநதுசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக.ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இய

றப்பட்டபாலவியாகரணம்.. 0 - ௪ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

தெலுங்குபாலவியாகரணம்... 0 - ௪ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் அர்ச்சையைக்குறித்து நன்றாய் பயிண்டுசெய்தது.......................... 0 - ௮ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

௸ மட்டபயிண்டுள்ளது..... 0 - ௭ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது......... 0 - ௮ - 0
தபால்கூலி............ 0 - ௨ - 0

தெலுங்கில் ஸ்தோத்திரபாடம். 0 - ௧ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

௧௮௮௫ (வரு) மேமாசம் முதல் ௧௮௮௬ (வரு) எப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ௫ - 0 - 0
தபால்கூலி.......... 0 - ௪ - 0

வசனக்கலம்பகம்ஒன்றுக்கு... 0 - ௫ - 0
தபால்கூலி............ 0 - ௧ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

இந்தபுத்தகங்களை பெங்குளூர் கண்டோன்மெண்டில் - ஷாப்பு - மதுரைமுத்துப்பிள்ளை யவர்களிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம்.

விளம்பரம்.

தெலுங்கு தத்துவபோதினி.

இஃது சென்றநவம்பர்முதல் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகின்றது. நவம்பர்முதல்மேமீ வரையில்அரைவருஷசந்தா. 0 - ௧௨ - 0
தபால்கூலி........... 0 - ௩ - 0

தத்துவபோதினி.

சோதரர்களே ?

"சத்தியமேவஜயதே"யென்னும் வாக்கியத்தைப்பற்றிநாங்கள்எழுதியசமாதானம் சரியன்றென்றும், மூலபாடத்தில்"ஜயதி"யென்றேயிருக்கிறதென்றும் குறித்து அதற்கத்தாக்ஷியாக நான்குமூலப்பிரதிளையும்தர்மசபையார் அனுப்பினர். அதில் ஜயதியென்றேயிருக்கக்கண்டோம். ஆயினும் முப்பதுவருஷகாலமாய் பங்காளம், காசி முதலிய பிராந்தியங்களிலுள்ள பலபண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டமூலபுத்தகங்களின் வேதத்திலும்பாஷியத்திலும் "ஜயதே' என்றிருப்பதால் யாங்கள்அப்படி பிரயோகித்தோம். இவற்றுள்சுத்தம் எதுவாயிருப்பினும் காரியாம்சத்தில் இருவருடைய அபிப்பிராயமும் ஒன்றாயிருக்கையால் இச்சொற்களைப் பற்றித் தலையை யுடைத்துக்கொள்வதில் யாதொரு பிரயோஜனமு மில்லையென்று சூசிக்கலானோம். மேலும் "சாந்திர்ஸ்மிருதி" என்று விதவஸ்காரப் பிரயோகம்செய்தது அச்சுப்பிழையாகையால் அதைப்பற்றி மன்னிக்கக்கோருகிறோம். "கூவ௺ணாவீரஹாதநம்" என்பதில்பிழை தோற்றவில்லை என்றார். அதின் பாஷியத்தைக்கண்டிருக்கின் அப்படி சொல்லத்துணியாராகையால் அதையிவ்விடத்தில் குறிக்கிறோம். தைத்தரீயோபநிஷத்து-முதல்வல்லி - சம் - அனுவாகத்தில்"கூ௺ணா = நிவதயதி, சுவீரம் = சுவீரம் = க்ஷிவசேவ, மாநு

ஸொயீவடிஃ" என்று சங்கராசாரியர் பாஷியம்செய்திருக்கின்றார். இதில்மாத்திரைநீண்டலதைக் காண்க.

"ஹஜ்ரகெணூஹிஃ ஸ்ரணூயாஃ" என்பதின் பாஷியத்தையும் பரிசோதிக்காமலே "ஹஜ்ரகெணூஃ, ஸஹிஸ்ர ணூயாஃ, என்றும், ஹஜ்ரகெணூஹிஃ, ஸ்ரணூயாஃ" என்றும்மாத்திரம் பதம்பிரித்து "ஸுபொஹிஸுவெஹி, வஹுஜஸந்ஷஹி" என்னும் சூத்திரத்தையும் பக்கத்தில்எழுதிவிட்டு அதின்பிழைதெரியாமல்சும்மாயிருந்துவிட்டார். அதிலுள்ளபிழையாவது அகாராந்த புல்லிங்க மாகிய கணூவெடீம்மூன்றும் வேற்றுமைப்பன்மையில் "கெணூஃ" என்றாக வேண்டியிருக்க இகாராந்த-நகாராந்தபதங்கள் புடைபெயர்க்கப்படுவனபோல் "கெணூஹிஃ" என்னும் ரூபமடைந்திருப்பது வியாகரணத்திற்கு விரோதமா யிருப்பினும் வேதத்திற்கு மாத்திரம் சாதுவேயென்று அதின்பாஷியத்தால்வெளியாகின்றது. ஸுக்லயஜுர்வாஜஸநெய ஸம்ஹிதையாயுர்நீயம் இருபத்தெட்டாம் அத்தியாத்தில் உள்ள "ஹஜ்ரகெணூஹிஃஸ்ரணூயாஃதெவாஃ, ஹஜ்ரவஸெர்ாக்ஷஸிய டுஜதாஃ." என்பதற்கு ஸஹீதராவாயுர்க்ருதமாகிய வெதீவஸென்னும்பாஷியத்தில். "தெ ஹெவாஃ, கெணூஹிஃகெணூஃ,= ஹஜ்ர =கஹ்ராணஃ= ஸாக்ஷகெஃ. வயாஸ்ர ணூயாஃ; ஹெயஜதாஃ. யஜக்ஷதா யதெ = ஈக்ஷதி = யஜதாஃ; = யஜமா நவாகாஃ, ஸக்ஷஹிஃ = நெநெதாஃ, ஹஜ்ரவயவஸெர்ாஃ; வஹுஹுஷா நவீதி; ஹஷாதள ஸக்ஷிஸவஸ்ராநதா தெஸ்ஃ" என்று சொல்லியிருக்கிறது இதில் அசுத்தப்பிழையையுங்காண்க.

இப்படியே "யஜூ" சப்தமும் அகாராந்த-புல்லிங்கமாயிருக்க வேதத்தில்மாத்திரம் 'தாநயஜூாணி' என்று க்லீபமாய்பிரயோகமானது அதற்குமாத்திரம்உரித்தானசிறப்புக்கோளென்று சொல்லியிருக்கிறது. 'வஷயஃஸஹஸ்ரநாதநஃ' என்றுவால்மீகரும் 'யஜூவவஹஸொஹஜ்ரயடெஜூாபக்ஷதிரக்ஷிதஃ' என்றுமனுவும் "ஸ்ரணூஷஜூநயொயஜூாநு ஸ்ரு ஹஜ்ரஸஹ்ரயதவ்ராதாஃ" என்றுயாக்ஞயவல்கியரும் உரைத்திருக்கின்றமையால் தர்மசப்தம் லோகத்தில் நபும்சகலிங்கமாய்க்கொள்ளப்பட்டதில்லையென்பது நிச்சயம்.

வழூஉமைதியென்பதினால் எங்கள்கருத்தெல்லாங்கூடி வியாகரணத்திற்குட்படாததாயும் கேவலம் வேததிற்கே உரித்தாயும் விதியின்றி யமைந்ததாயுமுள்ளபாடமென்பதேயொழிய வேறன்று.

இனியவர்கள்கேட்ட ௩௩ வினாக்களில் முதல்வினாவிற்கிப்போது விடை யுரைப்போம். அஃதாவது "வேதசமாஜமென்பதற்கு எது அர்த்தம், அது வேதபரமா, மனுஷியபரமா? இதை லக்ஷணத்தோடுரைக்கவேண்டும்" என்பதாம். வேதசமாஜமென்பதால் எங்களுத்தேசியம் வேதமார்க்கத்தை யனுசரித்தசபையென்றுபலர்எளிதில்அறியக்கூடியதாயிருக்க அதில் இவர்கட்கு அர்த்தசந்தேகம் ஜனித்ததற்கு காரணமின்னதென்று விளங்கவில்லை. அதைவேதங்களின் கூட்டமென்று வேதபரமாகப் பொருள்கொள்ளின் அஃதெவ்வாறு பொருந்துமென்பதை அவர்கள் யோசிக்காமற்போனது புதுமைதான்.

யாதொருசொல்லுக்குப் பொருள் கூறவேண்டுமெனில் அஃது பிரயோகிக்கப்பட்ட இடத்தையும் பிரயோகித்தவரின் கருத்தையும் ஆலோசித்துச் சொல்லவேண்டுமேயொழிய கண்டப

டி பொருள்கொள்வது விபரீதப்விளை
க்குமென்று நம்மன்பர் அறியாதவரா
யின் அவர் இக்கேள்விகேட்டது சகஜ
மென்றே யொப்புக்கொள்ளலாம். அ
வ்வாறின்றி யதையறிந்தேகேட்டாரெ
னில் அந்த அனுவசியகமான பிரசனை
க்கு நாங்கள் விடைதராமல் சும்மாயி
ருந்துவிடுவதே தகுந்த பிரதிகாரமாயி
ருக்குமாயினும் யாவரும் அதின்ஸ்வ
ரூபத்தை யுணரும்பொருட்டும் இவ்வ
ளவாயினும் பிரஸ்தாபித்தோம். மற்ற
தை வருகிறதடவை தொடர்ந்து விசா
ரிப்போம்.

சோதரர்களே !

சத்தியம்ஓங்கி யொருமைப்பாடுண்
டாகி தேசம்சுகமடையவேண்டுமென்
கிறஎங்களுத்தேசியம் கூடியவிரைவில்
கைக்கூடி வருமென்பதற்கு இப்போ
தேதகுந்தகுறிகள்காணப்படுகின்றமை
யால் அச்சந்தோஷசமாசாரத்தையுங்க
ளுக்கும் தெரிவிக்க யாங்கள்மிகவுமாவ
ல்கொண்டிருக்கிறோம். அஃதாவதுஎங்
கள்சமாஜ மேற்பட்டதுமுதல் இதுவ
ரையில் விளைந்த பயன் விசேஷமாய்
தெரியப்படாதிருந்தாலும் இஃதுஒவ்
வொருபுத்திமான் ஹிருதயமும் விழி
த்து விஷயவிசாரம் செய்யவும், உண்
மையீதென்றறியமுயலவும் தூண்டிக்
கொண்டு இருந்ததென்பதற்கு இப்ப
த்திரிகையில் பிரசுரமாகும் நிருபங்க
ளேசாக்ஷியாகையால்இதற்குவேறுநித
ர்சனம் வேண்டிய தில்லை. இப்போழ்
தோவெனில் முன்னிலும் ஆங்கங்குவி
ஷயவிசாரம் பிரபலித்து யாதொன்
றையுந்தீர்க்கமாய் சர்ச்சித்தறியவேண்
டுமென்னும் கியானம் உதித்து சீர்ப
டவேண்டுமென்னும் ஆவலும் அதிக
ரித்திருக்கிறதென்பதை ஒருதிருஷ்டா
ந்தத்தால் சூசிக்கிறோம். இதுகாறும் இ
ச்சென்னைமாநகரில் தமிழ்சுதேசத்தர்

பத்திரிகைஇஃதொன்றே. கடந்தசெப்
டம்பர் மாதம்தொடங்கி "கலாவர்த்த
னி" என்னுமற்றொரு தமிழ்ப்பத்திரி
கைபிரசுரமாய் வருகின்றது. அதின்மு
க்கியமான வுத்தேசியம் அதின்பெய
ராலேயே விளங்குமாகிலும் மதவி
ஷயத்தைப்பற்றியும் சிலபிரஸ்தாபம்
செய்யப்பட்டு வருகின்ற தென்பதை
ப்பற்றிசந்தோஷிக்கிறோம். அஃதுமு
க்கியமாய் சைவமதஸ்தரால் நடத்த
ப்படுகின்றமையால் கொள்கைகளும்
அதைச்சார்ந்தன வாகவே இருக்குமா
யினும் அதனால் பலபெருநன்மைக
ள் விளையுமென்றுமாத்திரம் நாம்ஊ
கிக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறுசெ
ய்வமதத்தார் தங்கள் மதப்பிரவசனம்
செய்யத்துணியவே வைஷ்ணவர்களி
லும் சிலர் "சத்சம் பிரதாயசபை" யெ
ன்றொரு சபையேற்படுத்திக் கொண்
டு "சத்சம் பிரதாய ப்பிரகாசிகை"
என்னும் பேரால்ஓர்பத்திரிகையையு
ம்பிரசுரப்படுத்தஇருக்கிறார்கள். இவை
யெல்லாம் நமதுதேசத்திற்கு நல்ல
காலம்நெருங்கியதென்று கருதவேண்
டியிருக்கிறது. இம்மூன்றுபத்திரிகைக
ளின் ஸ்வரூபத்தை அதைகண்ணுறும்
புத்திமான்களே புணர்ந்து எற்கநட
ந்து கொள்வார்களாகையால் நாங்கள்
அவற்றைப்பற்றி யொன்றும் பிரஸ்தா
பிக்கவேண்டியதில்லை.

குறிப்பு.

க. மிஸ்கார்பெண்டர்என்னும் சீமாட்டி
யைப்பற்றி நாங்கள் எழுதமறந்தோமல்
லம்.

உ. சந்தேகியென்றுரைபொப்பமிட்டுஓர்
கனவான் எழுதியகடிதப்படி நாங்கள்பிர
ம்மசமாஜமென்று பெயரிட்டுக்கொள்ள
யாதொருஆக்ஷேபமில்லை ஆயினும்இஃது
வேதசமாஜமென்று வழங்கிவிட்டபடியா
ல் மாற்றி வழங்குவது சடிநசாத்தியமாகு
ம். மற்றப்படி ஆங்காங்குணடாகும் சபை

களுக்கு பிரமசபையென்றுபெயரிடுவதில எங்களுக்குச்சம்மதமே

௩. தர்மசமாஜத்தாரிஷ்டப்படிக்கு அவர்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும் செய்தனுப்பும் உபந்நியாசங்களை எங்கள்பத்திரிகையில்பிரசுரப்படுத்தி வேண்டியவற்றிற்குசமாதானமுந் தர இஷ்டமுள்ளவராயிருக்கிறோம்.

மற்றநிருபங்களை வருகிறதடவை பிரசுரப்படுத்துவோம்.

விசேஷ அறிக்கை.

இந்தப்பத்திரிகையை யாரம்பித்து ௩-வருடம் ஆகவருகின்றது. மேமாதந்தொடங்கி நான்காம்புத்தகம் யாரம்பிக்க வேண்டியிருப்பதால் சந்தாசெய்ய மனமுடையவர்கள் கூடியவிணாவில் ஏப்பிரல் மாதம் முப்பதாந் தேதிக்குள்ளாக தங்கள் சந்தாக்களனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி சந்தாவையனுப்பும்விஷயத்தில் ஒவ்வொருஸ்தலத்தில் ஒவ்வொருவர் ஏஜண்டாகநின்று மற்றவரின் தொகையையும் யொன்றாகச்சேர்த்து அனுப்பும் பக்ஷத்தில் யாவர்க்கும் சகாயமாயிருக்கும். அவ்வாறே பத்திரிகைகளையும் மொத்தமாய் ஒருவர் பேரால் வரவழைத்துக்கொண்டுஅவ்வவருக்குச்சேர்க்க இடமுண்டானால்அதில் இருவகையானலாபமுங் கைகூடும். முதலாவது,தபால்கூலி குறைவுபடும். இரண்டாவது ஒவ்வொருவரும் தனித்தனியாக உத்தரபிரத்தியுத்தரங்கள்வைத்துக்கொள்ளும் பிரயாசைநிவர்த்தியாகும். ஆகையால் அவ்வவ்விடங்களிலுள்ளசந்தாதாரர்கள் இதைப்பற்றிபரியாலோசித்து இஷ்டமுஞ் சாத்தியமுமானால் இவ்வழியையனுசரிக்க எச்சரிக்கிறோம்.

மநுநூல்.

௩-ம் அத்தியாயம்.

(௬௭) விவாஹ அக்னியிலேயே கிரஹஸ்தனானவன் ஸாயம் பிராதக்காலங்கள்தோறும் ஔபாஸனமும் பஞ்சயக்கியம் (வைசுவதேவம் முதலியதும் மைற்ற கிரஹஸ்தனுக்கடுத்த அன்னிககர்மங்களையும் செய்யத்தக்கவனாகின்றான்.

(௬௮) கிரஹஸ்தன்செய்யும்ஹிம்ஸைகளின் தேசங்களானவை அடுப்பு, கல்லுரல், துடைப்பம், உரலுலக்கை, ஜலகும்பமெனவும் ஐந்துஇடம் (ஆகின்றன.)

(௬௯) மேல்குறித்த ஐந்துமஹாபாபங்களையும் போக்கிக்கொள்வதற்காக, பஞ்சயக்கியமானது, கிரஹஸ்தனுக்கு இருஷிகளால்ஏற்படுத்தப்பட்டன.

(௭0) அத்தியயனம் (செய்தலும்)செய்வித்தலுமே பிரம்ம யக்கியம் ; தர்ப்பணம்செய்தலேபிதிருயக்கியம்; ஹோமம்செய்தலேதைவயக்கியம் ; பூதங்களுக்காக பலிகொடுத்தலே பூதபலி ; அதிதிகளை ஆராதிப்பதே நரயக்கியம்.

(௭௧) மேல்குறித்தஇவ்வைந்துமஹாயக்கியங்களையும் தன்சக்திக்கியைந்தவாறு எவன் நடாத்தி வருகிறானோ அவன் கிரகத்திலேயே இருந்தபோதிலும் பஞ்சஸூனமென்னும்மேலுரைத்த தோஷங்களால் விடுபட்டவனாகின்றான்.

(௭௨) தேவதை, அதிதி, ப்ருத்தியர், பிதிருக்கள், இவர்களின்திருப்தியையும், தன்ஆத்மாவின்திருப்தியையும் எவன்செய்யவில்லையோ அவன்ஜீவித்திருந்தும் பிரேதத்திற்கொப்பாவான்.

(௭௩) சிலர் பஞ்சமஹாயக்கியத்தை ஆஹுதம், ஹுதம், பிரஹுதம், பிராம்மியஹுதம், பிராசிதம், எனவும் ஐந்து வெவ்வேறுவிதமாய் நாமமிட்டழைக்கின்றனர்.

(௭௪) அவற்றில் ஆஹுதமென்பது ஜபமாம் ; ஹுதமென்பதுஹோமம்செய்தல் ; பிரஹுதமென்பதுபூதபலி; பிராம்மியஹுதமென்பது பிராம்மணபூஜை; பிராசிதமென்பதுபிதிருதர்ப்பணம்.

(௭௫) (தரித்திரத்தால் அதிதிபூஜை முதலியது செய்ய சக்தியில்லாவிடினும் ஒவ்வொருவனும்)நித்தியம் அத்தியயனம்

செய்பவனும், தெய்வபலி கொடுப்பவனுமாக இருக்கவேண்டும்; தெய்வபலி மாத்திரம்கொடுப்பதால்ஸ்தாவரஜங்கமமயமாகிய இவ்வுலகம் முழுதும் திருப்தியடைந்ததாகின்றது.

(எசு) அக்னியில் நன்றாய் செய்தஆகுதியானது (தூமமார்க்கமாய்) சூரியனையடைகின்றது; (அது) சூரியனிடத்தினின்றும் மழையாகவருகின்றது; விருஷ்டியினின்றும்அன்னமுண்டாகின்றது; அன்னத்தினின்றும் பிரஜை யுண்டாகின்றது.

(எஎ) (பிராணமென்னும்) வாயுவை ஆச்ரயித்து ஸகலமாகிய பிராணிகளும் எவ்வாறு ஜீவிக்கின்றனவோ அவ்வாறே ஸகல ஆசிரமங்களும் கிரஹஸ்த ஆசிரமத்தை அவலம்பித்து ஜீவிக்கின்றன.

(எஅ) மற்ற மூன்று ஆசிரமத்திலிருப்போரும் தினந்தோறும் கியானத்தாலும்அன்னத்தாலும் இரக்ஷிக்கப்படுவதால்கிரஹஸ்தாசிரமமானது மிக்கசிறந்தஆசிரமமென்று அழைக்கப்படுகின்றது.

(எகூ) இந்திரியநிக்கிரகம் செய்தவர்களின்வகுப்பில் சேரத்தகாதவனும், அக்ஷயமாகிய சுவர்கத்தையும, இஹலோகத்தில்(அன்னபானம் ஸ்திரீசுகம் முதலிய) சுகங்களையும் விரும்புவோனால்கிரஸ்தாசிரமமானது நன்றாய் காக்கத்தக்க தாகின்றது.

(அ0) இருஷிகளும், பிதிருக்களும், தேவர்களும், பூதங்களும், அதிதிகளும் கிரஹஸ்தனிடத்தினின்றும் (அன்னத்தை) பிரார்த்திக்கின்றன; ஆகையால் கிரஹஸ்ததர்ம மறிந்தவரால் அவர்களின் பொருட்டு செய்யத்தக்கவைஎல்லாம் அவசியமாய் செய்யத்தக்கனவாகின்றன.

பிராம்மதருமம்.

(பு-ந, இ-க0, ப-கஎகூ-க்குப்பிறகு.)

முதல்கண்டத்தில்,

அ - வது - அத்தியாயம்.

கூச. அவருக்கு எங்கும்கண், எங்கும்முகம், எங்கும்கை, எங்கும்கால். அவர் மானிடஉடல்களுக்கு கைகளையும், பறவைகளுக்குஇறக்கைகளையும் சேர்த்திருக்கிறார். விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் படைத்த தேவன் அவர் ஒருவரே.

கூரு. அவர்எல்லாவிடங்களிலும் கைகால்களையுடையவர். எங்கனும் கண் தலை முகங்களையுடையவர். எவ்விடத்தும் கேள்வியுடையவராய் எல்லாவற்றையும் வியாபித்திருக்கிறார்.

கூசு. அனேகமுகங்களும், சிரசுகளும், கழுத்துகளுமுடையவர், எல்லாஉயிர்களின் உள்ளங்களிலும குடிகொண்டிருக்கிறார். ஆனதால் எங்கனும் நிறைந்திருக்கிற அந்தபகவான் ஸர்வகதன், மங்களஸ்வரூபி.

கூஎ. அவர் கைகால்களில்லாதவராயிருந்தும் நடக்கவும் பற்றவும் சக்தியுடையவர். அவர் கண்ணில்லாதிருந்தும பார்க்கிறார். காதில்லாதிருந்தும் கேட்கிறார். அறியவேண்டியதையெல்லாம் அவரறிகிறார். அவரையறிந்தவர்களில்லை. அவரை முதல்வனென்றும், பூரணனென்றும், சிறந்தவனென்றும் சொல்லுகின்றனர்.

கூஅ. யார் உயிர்கள் உரங்குகிறபோதும், அவற்றிற்கு வேண்டியவைகளை படைத்துக்கொண்டு உரங்காதிருக்கின்றனரோ, அவரேசுத்தர், அவரேபிரமம், அவரே நித்தியரென்று சொல்லப்படுகிறார். அவரிடத்திலேயே எல்லாஉலகங்களும்பற்றி யிருக்கிறதுகள். ஒருவரும் அவரை அதிக்கிரமிக்கமாட்டார்கள்.

கூகூ. பரமாத்துமா சிறிய வஸ்துக்களைவிட சிறியவஸ்துவு, பெரியவஸ்துக்களைவிட பெரியவஸ்துவு. அவர் பிராணிகளுடைய இருதயங்களில் வஸிக்கிறார். அந்தஈசனையும் அவனது பெருமையையும், அந்தஈஸ்வரனுடைய அருளால்(மனக்கண்ணினால்)தரிசிக்கிறவர்கள் சோகமில்லாதவராகின்றனர்.

எ0. யார் ஒருவராயும், ஸகலத்திற்கும் நியாமகராயும், எல்லா வஸ்துக்களினுடையவும் அந்தராத்துமாவாயும், ஒருஉருவத்தை பலவாருகச் செய்கின்றவராயுமிருக்கின்றனரோ, அவரை தமதுஆத்மா

க்களில்இருக்க நர்சுக்கின்றவிவேகிகளுக்கே நித்தியசுகம். இதாருக்கில்லை.

௭௧. யார் அநித்தியவஸ்துக்களில் நித்தியரும், வேதனவஸ்துக்களில் அந்த வேதனத்துவத்தையளிப்பவரும் தான் ஒருவராயிருந்தும் பலவற்றிற்கு வேண்டியவைகளைத் தருகின்றவருமாயிருக்கிறாரோ, அவரை தமது ஆன்மாக்களில்இருக்கக் காண்கிறதீரர்களுக்கே நித்தியசாந்தி, பிறர்களுக்கன்று.

௭௨. இருதயத்திலுள்ள அஞ்ஞான பந்த மறந்தஉடன் மனிதன் நித்தியபதவியடைகிறான். இதுவே உபதேசமென்றறியக்கடவீர்.

௮-வது-அத்தியாயம் முற்றிற்று.

தைத்தரீயஉபநிஷத்து.

பிரம்மாநந்தவல்லி.

முதல்அநுவாகம்.

பிரம்மத்தைஅறிடவன்பரத்தை(அப்பிரம்மத்தையே) அடைகின்றான்;—அதிலேயே(மேலுரைத்தருக்கிலேயே)இஃது (கீழ்ச்சொல்லப்படுவது) உரைக்கப்பட்டிருக்கின்றது—ஸத்தியம், ஞானம், அனந்தம் (இவைகளின்ஸ்வரூபம்எதோஅஃதே)பிரம்மம்;—உத்தமமாயும்ஆகாசமயமாயுமிருக்கும் குகையில்(ஹ்ருதயம்முதலியமறைவிடங்களில்) இருக்கின்ற (இதை—பிரமத்தை)எவன்அறிகின்றானோ;—அவன்(அப்படிக்குஅறிகின்றவன்)ஸகலமாகியகாமங்களையும்கூட அனுபவிக்கின்றான்; —ஸர்வஜ்ஞனாகிய பிரம்மத்துடன் ;—அப்படிக்கொத்த இந்த ஆத்மத்தினின்றுமே ஆகாசம்உண்டாயிற்று ; —ஆகாசத்தினின்றும்வாயுஉண்டாயிற்று;—வாயுவினின்றும் அக்னியுண்டாயிற்று;—அக்னியினின்றும்அப்(ஜலம்) உண்டாயிற்று ; —அப்புனின்றும் பிருதிவி (பூமி)யுண்டாயிற்று ; —பிருதிவியினின்றும் ஓஷதி(புல்பூண்டுமுதலிவை)யுண்டாயின;—ஓஷதியினின்றும் அன்னமுண்டாயிற்று;—அன்னத்தினின்றும்ரேதஸ்உண்டாயிற்று;—ரேதஸ்ஸினின்றும் புருஷன் உண்டாகின்றான்;—அப்புருஷன் அன்னத்தின்ரஸமயமாகின்றான்;—அவனுக்கு இஃதே (ஆத்மமே) சிரஸ்;—இஃதேவலப்பக்கத்தின்புஜம்;இஃதே—இடைப்பக்கத்தின்புஜம்;—இஃதேஆத்மா;—(நாபிக்குமேல்பட்ட) இச்சரீரமே பிரதிஷ்டையாகிய புஜமாகின்றது (பிரதான விடமாகின்றது)—அந்த அர்த்தத்திலேயே) இஃது(பிராம்மணத்தில்சொல்லப்பட்ட) மந்திரமாகின்றது.

முதல்அநுவாகம் முற்றிற்று.

உபந்நியாஸம்.

அன்னதானம்.

அன்பர்களே! மனுஷியர்களுடைய சாமானியதர்மங்களில் ஒன்றாகிய காருணியத்துக்குப் பிரவிருத்தியாகிய தானங்களைக் குறித்துப் பிரஸ்தாபிக்குங்கால் வித்தியாதானத்தின் சுவரூபத்தையும், அதற்குப்பாத்திரமின்னாரென்பதையும் குறித்துவிசாரித்தோமல்லவா; இனி மற்ற தானங்களைக் குறித்து ஒருவாறு பிரஸ்தாபிப்போம்.

மற்றதானஙகளுக்குள் அன்னதானம் வெகுசிறந்ததாய் அனைவராலும் கொள்ளப்பட்டிருக்கின்றமையால் அதைக்குறித்து முதலில்விசாரிப்போம். தான் “ஶரீரமாத்யம் கலு தர்மஸாதனம்” (தர்ம சாதனங்களுக்குள் முதன்மையானது தேகமே) என்கிற உண்மையினாலும், அந்த தேகம்நிலைப்பதற்கு உணவு அத்தியாவசியகமாகையாலும், அன்னதானத்துக்குண்டான பிராதானியத்துக்கு ஹேதுதானாய்விளங்கும். மற்றதானங்களைப்போலவே இதையும் பாத்திரமறிந்து செய்தால் மாத்திரமே பயனுண்டாகையால். முதலில் பாத்திரவிசாரம் செய்யவேண்டிய தாவசியகமாகிறது.

பாத்திர சுவரூபத்தைக் கூறுங்கால்பராசராதிஸ்மார்த்தர்கள் “அந்நஸ்ய க்ஷுதிதம் பாத்ரம்” (பசித்திருப்பவரோ அன்னதானத்துக்குப்பாத்திரம்) என்று பொதுப்பட கூறியிருக்கின்றனர். இது உண்மையேயாகிலும், அதின் கருத்து எளிதில் விளங்கமாட்டாது. எந்தகாரணத்தைப்பற்றி பசித்திருந்தாலும், அவர்கள் அன்னதானத்துக்குப் பாத்திரமென்பதல்ல இதின்கருத்து, பசியாதிருக்கச் சக்தியும் அவகாசமுமுள்ளவர்கள் கொழுத்துச் சோம்பேறித்தனத்தால் பசிக்காளாகில், அவர்கள் அன்னதானத்துக்குப்பாத்திரராக மாட்டார்கள். அவ்விதசக்தியும் அவகாசமுமில்லாதவர்கள் எந்த ஜாதியாராகிலும், எந்தமதத்தாராகிலும் பாத்திரரோ யாவார்கள். இவ்வாறுஸ்தூலமாய் மேற்குறித்த நீதிவாக்கியத்தின் கருத்தை யுரைத்தபிறகு, அந்த பாத்திரம் அதிதியென்றும், அயலாரென்றும் இருவகைப்படுவதாய் எச்சரிக்க வேண்டியிருக்கிறது. அதிதிகளுக்கு லக்ஷணம் கூறு

ங்கால், உழுராயொவமதம் ஸ்ராஜு வெஸ்வ
தெவகீ-வஷிதம், க்ஷதிஶிதூம் விஜாநீயாக்ஷநா
திஶிஃ உஹுவஶாமதஃ. நெகக்ரா மீணகதிஶிம்
ஸம் க்ருஹ்ந க்ஷாவந. நவ்யஹெதுக்ஷ மொதர்
வாணம் நீஸ்வாயுாயம் ஸ்ராதெயா. ஹ்ருஉ
யெக்ஷவ யெஜெவம் ஸவ்ஜெவமீயொஹிஸஃ."

(போஜன காலத்தில் பரதேசிகளாய் அலுத்து வருவோர்களே அதிதிகளென்றறிந்துகொள். ஒருதரம் வந்தவன்மற்றொருதரம்வந்தால், அவன்அதிதியாகமாட்டான். உள்ளூரானை ஒருக்காலும் அதிதியாய் பரிக்கிரஹிக்கவேண்டாம். அப்படிவருவோனை உன்கோத்திரமென்ன, வம்சமென்ன, வேதசாஸ்திராதிகளைப் படித்தவனு அல்லவா வென்பது முதலிய கேள்விகளைக்கேட்கலாகாது. சகல தேவதைகளும் கூடிவந்ததாகமதித்து அவனை யாதரிக்கவேண்டியது.) என்று பராசரர் கூறியிருக்கின்றனர். இந்த வாக்கியத்திலுள்ள பதசுவாரசியத்தாலே, அதிதி பூஜாசுவரூபமும் மகிமையும் விளங்குமாகையால் அதைச்சற்று விரித்துரைக்கிறேன். முதலாவது, ஒருவன்தன்நாட்டையும் ஊரையும் விட்டு அலுத்து அன்னியநாட்டிற் புகுந்து முகமறியாமல் தபித்துப்பசியால் வருந்திகொண்டிருப்பவன் புதிதாய் இடந்தேடி கலந்தேடிசமைத்துக்கொள்ள முடியாதாகையாலும், அப்படிப்பட்டவன் நாம் உண்ணும்காலத்தில்வந்தால் அவனைத்தகுந்தபடியுபசரிக்காமற்போவது மனுஷிய சுவரூபத்துக்கடுக்காதாகையாலும், போஜனகாலத்தில்பரதேசியாய் அலுத்துவருவோனை அதிதியாகமதிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டது. இதுபற்றியேவிருந்து புறத்ததாகத்தானுண்டல் சாவாமருந்தெனினும் வேண்டற்பாற்றன்று "(தனிமையில் உண்பதே அமிருதத்துக்கு ஒப்பாமென்று அனைவருங் கூடியுரைத்தாலும் அதுவிரும்பத்தக்கதன்று)" என திருவள்ளுவநாயனார்உரைத்திருக்கின்றனர். இரண்டாவது. பலதரம்வந்தாலும் அதிதிகளாகமதித்து அவர்களைப் பூஜிக்கும் பக்ஷத்தில் சோம்பேறிகளுக்குச் சுகமும், உழைப்பவருக்கு துக்கமும் நேரிடமாகையால் ஒருதரம்வந்தவன் மற்றொருதரம் வந்தால் அவன் அதிதியாகமாட்டான் என்று கூறப்பட்டது. மூன்றாவது. உள்ளூரானுக்குத் தன்னைப்போலவே ஆவசியக ஆனு கூலியங்களெல்லாம் அமைந்திருக்குமாதலால், அத்தன்மையானவனை ஒருக்காலும் அதிதியாய் வரிக்கவேண்டியதில்லையென்று கூறப்பட்டது. நாலாவது அப்படி வருத்தமுற்று வருவோர் ஜாதியெதுவாகிலும் விஷயமல்லவென்பதை யுணர்த்த சரணமென்னும் சொல் பிரயோகிக்கப்பட்டது. பிரும்மக்ஷத்திரிய வைசியர்கள்மாத்திரமே அதிதிகளாகத் தக்கவர்களெனில் கோத்திரமென்னும் சொல்லை யுபயோகித்ததே போதும். பள்ளி பறையர் துலுக்கர் முதலிய சகலப்பிராணிகளும் அதிதிகளாகக் கூடியவரென்று உணர்த்தும் பொருட்டே சரணம் (வம்சம்) என்கிறசொல்லும் வழங்கப்பட்டது. இந்தக் கருத்தை ஸ்தாபிக்கும் பொருட்டே வேதசாஸ்திராதிகளை யப்பியசித்தவர்களாயினும் இல்லாவிட்டாலும் பாதகமில்லையென்று கூறப்பட்டது. கடைசியாக அவ்வதிதிகளுக்கு ஆத்மதிருப்தியுண்டாகாத பக்ஷத்தில் அவர்கள் நிமித்தம்பொருளைச் செலவழித்தும் பயனில்லையாகையால், விருந்தினரையும் தேவர்களுக்கொப்பாய் மதித்து உபசரிக்கவேண்டுமென்று உரைக்கப்பட்டது. இதுபற்றிதான் "அதிதிதெவொபவ" (விருந்தினரையும் தெய்வம்போல் பூஜி) என்றுவேதமுழுமுரைத்தது. இக்காரணம்விளங்கும்பொருட்டே "மோப்பக்குழையுமனிச்சமுகங்கதிந்து நோக்கக்குழையும் விருந்து" (மோந்து பார்ப்பதாலேவாடிக்கசங்கிப்போகத்தக்கமார்த்தவசௌகுமாரியத்தை யுடையது அனிச்சமென்னும்புஷ்பமெனில், விருந்தினர்மனம் அதைக்காட்டிலும் மிகவும்சொகுசானது. ஏனெனில் கைதீண்டாமலே சற்று முகங்கதிந்து நோக்குவதாலே அது வாடிக்கசங்கிப்போகும். அவ்வாறு கசங்கியபிறகு என்ன உபசரித்தும் பயனில்லை) யென்று திருவள்ளுவநாயனாரு முரைத்தனர். விருந்தினர்சுவரூபத்தைக்குறித்து இவ்வளவுபிரஸ்தாபித்ததே போதுமாகையால் இனி அன்னதானத்துக்குப் பாத்திரராகத்தக்க அயலாரைக்குறித்துச் சிலமொழிகளைக் கூறுகிறேன். இவ்வயலார் யாரெனில் தாய்தந்தைகளை யிழந்து, ரக்ஷகரற்றுப்பரதவிக்கும் குழந்தைகளும்; பெற்றோர் பிறந்தோரையும் கணவனையும் பறிகொடுத்துக் கெதியிலையாகின்றஸ்திரீகளும்; வார்த்திக்கியத்தாலும், அசிகிச்சிதரோகங்களாலும் பீடிக்கப்பட்டு, சுவயமாய் ஆவசியகங்களைச் சம்பாதித்துக்கொள்ள சக்தியும் அவகாசமுமற்று, காக்கக்கடைமைப்பட்ட உறவினரு மற்றிருக்கும் ஜனங்களுமேயாவார்கள். இவர்களையும் விருந்தினராகவே கிரகிக்கக் கூடாதோவெனில், இவ்விருவருக்கும் வெகு பேதமிருக்கிறது. விருந்தினர் ஒருக்கால்மாத்திரமே உபசரிக்கத்தக்கவர். இவர்களோவெனில்நம்மவுதவியைவிரும்பும்போதெல்லாம், நம்முடைய சக்திக்கியைந்தவளவாயி விவர்களை ரக்ஷிக்க

வேண்டும். விருந்தினரைப் பூஜியதா புத்தியுடன் உபசரிக்கவேண்டும். இவர்களையோ வெனில் இரக்கத்தோடு ரக்ஷிக்க வேண்டும். விருந்தினர் பரதேசிகளாகவேயிருக்கவேண்டும். இவர்களோ, உள்ளூரார்களா யிருந்தாலும் நம்முடைய இரக்கத்துக்குப் பாத்திரரேயாவார். இவர்களுக்குநாமளிப்பதெல்லாம் கூடிபிராணனை பரிக்க ஆவசியகமான உணவுமாத்திரமேயாகையால்,அவர்களுக்குள்ளும் ஜாதிகுலம் என்கிற தராதம்மியத்தைக் கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில் ஒருவகுப்பினரை அதிசமாயும்,மற்றொருவகுப்பினரைக்குறைவாயும் பசிவருத்துகிறதில்லை. ஆகையால் நம்முடைய ஆதரவுக்கு அளவென்னவெனில், அதை விரும்புவோருடைய பசியேயளவாகுமென்று கொண்டுநடப்பதுயுக்தமும், தர்மமுமாகும். அன்னதானத்தால் உத்தேசிக்கப்பட்ட பயன்களெல்லாம் கைக்கூடிவரவேண்டுமெனில்பாத்திரவைலக்ஷணியஞானம் அத்தியாவசியகமாம். இந்ததர்மசூக்ஷமத்தைக்கவனிக்காமல், அபரிமிதமாய் அனனதானம் செய்தாலும், அதனால் பயனில்லாமற்போவது மாத்திரமேயன்றி பலவிசையதனால் அளவற்ற தீமைகளும் விளைகின்றன. இருளைப்போக்க ஒளியை அபேக்ஷிப்பதுசகஜமாகிலும், தீவர்த்தியின்கீழ்தீபமேற்றிவைப்பதினால் பயனுண்டோ. இவ்வாறே பசித்தவனுக்குணவளித்தால் பயனுண்டெனிலும், தனபசியைமாத்திரமன்றி இன்னும்பலர் பசியையும் தீர்க்கத் திறமுடையவர்களுக்கனனமளிப்பதில் பயனுண்டோ. தோட்டத்துக்கு நீரிறைப்பது எவ்வளவு பிரசித்தமோ, காட்டுக்கு நீரிறைப்பது அவ்வளவு அப்பிரசித்தமாக விருக்கிறது. வேண்டாதவருக்கும் அன்னமளிப்பதில் பயனில்லாவிட்டாலும், தீமையொன்றுமில்லையேயென சிலராக்ஷேபிக்கலாமாகையால், அதைச்சற்றுயோசிக்கவேண்டியதாகிறது. மனிதன் தன்முகத்து நீர் மூக்கால் வடிந்தொழுக உழைத்து ஜீவிக்க வேண்டுமென்பது கடவுளின் அமைப்பென்று அனைவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். இவ்வித அமைப்பை மீறிநடப்பது முதலெடுப்பில் நம்முடையசுவரூபத்துக்கு அடுக்காதென்பது ஸ்பஷ்டமாகவிருக்கிறது. இரண்டாவது உழைத்துஜீவிக்க சக்தியிருப்பவரும் சோம்பலிற்பழகி சுலபத்தில் வயிறுவளர்க்கத்தலைப்படுவதால், மனிதர்க்குமாத்திரமென்று கடவுளருமையாயளித்தலஜ்ஜைமானம் என்பதும் ஒழிந்து, புத்தியுள்ளவர் நகைத்தாலும், வருத்தமுற்றவர் உதைத்தாலும், லக்ஷியமின்றி மேல்விழுந்து போராடி கொள்ளையாளிகள்போல்பறிப்பதற்கு, கோயில்களில் விநியோகம் வாங்குவோரையும், உத்தராதியார்தக்ஷிணைவாங்குவதையும் விடவேறொரு திருஷ்டாந்தமும்ஆவசியகமில்லை. தத்வவிசாரார்த்தமாக அன்னதான சத்திரங்களில் நடக்கும்மரியாதைகளைக்கவனித்தவர்களுக்கு யாதொரு திருஷ்டாந்தமுமாவசியகமில்லை. இருபதுபேர்க்கு ஈடுசொல்லத்தக்க பலமுடையவர்களெல்லாம், வாழ்வினைச்சிலகாலமும், சாவையேபலகாலமும் கோரிக்கொண்டு, காக்கைபோல் கூட்டம் கூடி வீடுவாசல் குளம் குட்டைகளெல்லாம், வயிறுகளை வாடவைதது, நாக்கினைத் தொங்கவிட்டு, கும்பலில் மேல்விழுந்து, கலகமாய்க் கூச்சலிட்டு சொடுப்போரை யலுக்கச்செய்து ஒருகபளம்சோற்றையேனும், இரண்டொருதுட்டையேனும், பதறியே பறித்துக்கொண்டு, ஒருவேளை சோற்றுக்குமீயாத இப்பாவி யிருந்தென்னபோயென்னவென்று மண்ணைவாரித் தூற்றிக்கொண்டு போகின்றனரெனில் அவர்களுக்கு அவ்வித பிழைப்பினால் மானங் கெட்டுப்போவது ஒன்றுதவிர வேறொருபயனுமில்லை. இவ்வாறு வீண்காலம் கழிப்பவர்களுக்குச் சோம்பேறிச் சோறளிப்போரில்லாவிடில், அவரவர் கவுரவமான மார்க்கங்களையனுசரித்து கவுரவமாகவே காலக்ஷேபம் செய்வார்களல்லவா? மூன்றாவது தர்மச்சோறுண்டிந்த தேசத்தைக்கெடுப்பவர்கள், வயிறு நிறைந்தால் பானை மூடுவானேனென்று புரண்டுறங்கிய மனுத்தபின்பு வேலையும் கவலையுமற்ற அவர்கள்மனம் செய்யத்தக்கவேலைகளெத்தன்மையன வென்பதைச் சற்றுகவனிப்போம். (சோம்பேறியின் மனமே பிசாசின்பயிலிடம்) என்று இங்கிலீஷாரும் "தீமைக்குநாற்றங்கால் சோம்பேறி மனமே" என்று நம்மவரும் கூறுவதுபொய்யோ. சாதரணமாய் குற்றங்களின் விளைவைப் பரிசோதிப்போமாகில், கொலை கொள்ளை முதலியசவுரியம் பொருந்திய குற்றங்கள் மானத்தைக்கைவிடாத ஜனங்களால் விளைவதாகவும், மோசம், வஞ்சனை, புறங்கூறல், கோள்சொல்லிக் குடியைக்கெடுத்தல்முதலிய நீசகுற்றங்களெல்லாம், மானததையும் கவுரவத்தையும் தொலைத்து நரஸ்துதி செய்து, அகிருத்தியங்களாலேவயிறுவளர்க்கும் நீசர்களிடத்தே யுண்டாகின்றனவென்றும் சுலபமாய்விளங்கும். உண்டவீட்டுக்கிரண்டு நினைப்பதெல்லாம் இப்பாவியரோயாம். நான்காவது, சாதாரணமாய் உலகத்தில் இருவர் நிமித்தம் ஒருவனுழைப்பது சுவபாவமாயிருக்கிறது. ஏனெனில் ஸ்திரீகள் சுவபாவததில் திரவியார்ஜனைக்கு அசமர்த்தராயிருக்கின்றமையால், புருஷருடைய ஆ

ர்ஜனையில் பேர்பாதி ஸ்திரீகளுடைய சம்ரக்ஷணைக்காக செலவழிகின்றது. இங்கிலண்டு, பிரான்சு, முதலிய நாகரீகத்திற்சிறந்த அநேகநாடுகளில் புருஷருக்குச் சமானமாயில்லாவிடினும் ஏகதேசமாவது ஸ்திரீகளும் சம்பாதிக்கசக்தாராயிருக்கிறார்களென்று சரித்திரங்களால்வெளியாகிறது. நம்மதேசத்திலும், நீசகுலமென்று ஒதுக்கப்பட்டு, உண்மையில்உத்தமகுணங்களையுடைய பலவகுப்பாரில்ஸ்திரீகளும்கூலிக்குவேலைசெய்து திரவியார்ஜனை செய்கிறார்கள். ஆகிலும் இதெல்லாம் காதாசித்கமேயன்றி சார்வத்திரிகமாயிராது. ஆகையால் இருவர்பிழைக்க ஒருவருழைப்பது சாதாரணமாய் லோகசுவபாவமென்பதில் சந்தேகமில்லை. இதையும்விட்டுஒருநாட்டில் பலர்பிழைக்க ஒருவருழைக்கும்படி நேரிட்டால், அந்தநாட்டில் செல்வம் விருத்தியாவது சாத்தியமோ! நம்மநாட்டில் பார்ப்பாரென்றும் பக்கிரியென்றும், பண்டாரமென்றும், பரதேசி யென்றும், சாத்தானியென்றும் சனியாசியென்றும், பெயரிட்டுக்கொண்டு சோம்பேறிப் பிழைப்பு செய்வோரையும், அவர் பெண்களையும் கணக்கிடுவோமாகில் இவர்கள் நம்மதேசத்தாரில் ஏறக்குறைய பாதியிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. தத்தமது பெண்டுபிள்ளைகளைமாத்திரமேயன்றி இச்சோம்பேறிகளையும் ரக்ஷிக்கும்பொருட்டு எவ்வளவு சிரமப்பட்டு சம்பாதித்தாலும், ஒருவன் ஐசுவரிய வானாகக் கூடுமோ ? இதற்கெல்லாம் உட்பட்டிருந்து யாரோ யிரண்டொருவர் ஐசுவரியவந்தாரானார்களென்பது இதற்கொரு சமாதானமாகமாட்டாது. இருவர் செல்வவான்களாகில் தேசத்தைச் செல்வ முடையதெனக் கூடுமோ! நம்முடைய நாட்டில் உயர்ந்தபதவிகளிலிருந்து வெகுகாலம் சிரமப்பட்டு அபரிமிதத் திரவியத்தைச் சம்பாதித்தவர்களெல்லாம், இரண்டு கலியாணங்களும், கல்லெடுப்புகளும்செய்து பொருளைப் பாழுக்கிறைத்து விட்டதற்கு திருஷ்டாந்தங்களும் எடுத்துரைக்கவேண்டுமோ! ஐந்தாவது, இவ்விதமாக வியவஸ்தையின்றி பொருளை யழிப்பதனால், உண்மையானபாத்திரங்கள் நேரிடுங்கால் அவர்களுக்குதவ சக்தியில்லாமற்போகிறது. இவ்வாறு உண்மையான தர்மத்துக்கு இடமில்லாமற்போவது மாத்திரமேயன்றி, சுத்த அதர்மப்பிரவிருத்திக்கு வரம்பற்ற அவகாசமுண்டாகிறது. பாத்திரவைலக்ஷணியமின்றி அன்னதானம் செய்வதால் விளையும் தீமைகளைக்குறித்து நிச்சேஷமாய் இன்று உரைத்து முடியாதாகையாலும், அவற்றை சுவல்பசிரமத்தால் அனைவரும் அறிந்துகொள்ளக் கூடுமாகையாலும் அதையிவ்வளவுடன் முடிக்கிறேன்.

இதனால் நாங்கள் சாமான்னியமாய் அன்னதானத்தை நிந்திப்பதாய்கொள்ளக்கூடாது. பாத்திரமும் சமயமுமறிந்துசெய்யும் அன்னதானத்தால் நன்மையுமுண்டு தீமையுமில்லை. இதையொவ்வொருவரும் தனித்துச் செய்யமுடியாதாகையால், நாகரீகமுற்றநாடுகளில் நடந்தேறிவரும் ஆசாரத்தை யவலம்பிப்பது உத்தமமாகும். அதென்னவெனில் வேலைத்துறை யென்றும், கஞ்சி தொட்டிகளென்றும் சிலசாலைகளைப் பலர்கூடியேற்படுத்தி, மொண்டிமுடம் கூன்குருடு முதலியவர்களைக் கஞ்சிதொட்டிகளிலும், சோம்பேறிகளை வேலைத்துறைகளிலும் சம்ரக்ஷிக்கமுயல்வோமாகில், தீமைக்கவகாசமின்றி நன்மையைமாத்திரம் அடைவோமென்பது அனுபவசித்தம். உலகத்திலுள்ள விருத்திகளுக்குள் பிச்சையெடுப்பதைவிட நீசமானவும் அகவுரவமானவும் விருத்திகிடையாது. இதுபற்றிதான் ஒருகவியானவன் யாசகனை பஞ்சைக்காட்டிலும் லேசானவனென்றும்; ஆனால் பஞ்சை யடித்துக்கொண்டு போகும் காற்றானது அவனையேன் அடித்துக்கொண்டு போகவில்லை யென்றாலோ, தன்னையும்யாசித்துப்பீடிப்பானென்கிற பயத்தாலே யென்றும் வர்ணித்திருக்கிறான். இவ்வளவு இழிவாய் இகழப்பட்டருக்கிற விர்த்தி நம்மநாட்டில் கவுரவமுள்ளதாய் விளங்குவதற்குக் காரண மென்னவென்று விசாரிக்கபுகுங்கால்,பழக்கத்தின் கொடுமையேயென்று ஸ்பஷ்டமாய்விளங்கும். ஆகையால் இன்னின்ன ஜாதியாரனைவரும் அன்னதானத்துக்குப்பாத்திரரென்றுபிசகாய்க்கிரகிக்காமல் பசியைத் தீர்த்துக்கொள்ள சக்தியும்அவகாசமுமற்று வருந்துவோர் எந்தஜாதியாராகிலும், எந்தமதத்தாராகிலும், பேதமின்றி நம்முடைய ஆதரவுக்குப் பாத்திரரென்று கொண்டு நடப்பது நமது சுவரூபத்துக்கும் இசைந்திருக்கும்; கடவுளின் திருவுளத்துக்கும் உசப்பாயிருக்கும்.

பட்டுக்கோட்டை பிரமசபை.

தத்துவபோதினி பத்திராதிபர்களவர்கட்கு.

ஐயா.

யான் வரையுஞ் சிலவரிகளை மேன்மைதங்கியஞானத்தாயாகியதங்கள் பத்திரிக்கையின்ஓர் கோணத்திற் பதிப்பிவிக்கும்படி தங்கள் கனத்தை வணக்கமாய்ப்பிரார்த்திக்கிறேன்.

இப்பத்திரிக்கைவாசித்து அதின் வழிநட

க்க கருதும் அன்புள்ளசோதரர்களே. யான் கண்டுகளித்த ஆநந்தத்தை நீங்கள்படித்தறிந்துஇன்பமுறுவீர்களெனத்தேர்ந்து வரையலானேன்.

அஃதாவது. இத்தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த பட்டுக்கோட்டையென்னுமிவ்வூரில்நானிப்பொழுதறிந்தபடி பிரமபஜனைசபையார் என்றபெயரினை வகித்திருக்கும் கூட்டத்தார் நான்குவருடகாலாமாய் பிரதிவாரத்தின் சனிக்கிழமையிரவிலோரிடத்திலொருங்கு கூடிபக்திமார்க்கமாய் பகவானை பஜித்து வருகிறார்களென்றும் அடுத்தஞாயிற்றுக்கிழமை மாலையில் வேதாந்த ஞானத்தை யபிவிர்த்தி செய்யும் பொருட்டுகுறித்திருக்கின்றநன மார்க்கபுத்தகங்களைப் படித்து ஒவ்வொருவருக்கு முள்ள சந்தேகங்களை நிவர்த்தித்து வருகிறார்களென்றும்கொஞ்சநாளாய் கேள்விப்பட்டிருந்தேன். ஆனலிந்தச்சபையாரில் பெரும்பாலும் இங்கிலீஷ் தெரிந்தவர்களிருப்பதால் அவர்களால் பிரவசனம் செய்யப்படும் விஷயமானது கிறிஸ்து மதசம்பந்தமானதென்று சிலராலும் இவர்கள் தெய்வமொன்றெனச் சொல்லும், நிமித்தம் இவர்களுக்குத தெய்வமில்லை யென்றுசிலராலும்சொல்லப்பட்டமையால் நான் மேற்படி யிடத்திற்குப்போய் அவர்கள் சொல்லும் சத்திய வசனங்களை கேட்காது காலத்தை அவமாய் கழித்துவிட்டேன். இப்படியிருக்க ௸ சபையார் கிறிஸ்து மதசம்பந்தமொன்னும் வீணபெயரைமாற்றிக்கொள்ளவேண்டுமென்ற எண்ணங் கொண்டோ அல்லது ஸ்வபாவமான சத்தியமார்க்கத்தை அஞ்ஞானிகளாகிய விக்கிரக ஆராதிகர்கள் முன்துணிந்து சென்று பிரவசனம் செய்து ஞானமார்கத்தை யெல்லவரும் தழுவும்படி செய்யவேண்டுமென்றதங்கள் கடமையை பூர்த்திசெய்யும் பொருட்டோ அல்லது அவர்கள் பிற ஊரார்களான உத்தியோகஸ்தர்களாதலால் பக்தியும் ஞானமும் சற்றுமில்லாத இத்தென் பிரதேசஸ்தர்களை கலந்து புகட்டாதவரையில் குறித்திருக்கின்றவிடத்தில் நீடூழிபகவானையாவரும் சேர்ந்து பஜித்து வரவேண்டு மென்ற தங்கள் கருத்தானது நிலைபெறுமற் போகுமென்ற ஆழ்ந்தகருத்தைக்கொண்டோ நாளத்௴ ௨௰ சனிக்கிழமை யிரவு ௮-மணிக்கு ௸ சபையைச் சேர்ந்த ஒருவராகிய நடராஜபிள்ளை என்பவர்வீட்டில் ௸ சபையார்கூடி பஜனைசெய்யும்விஷயத்தைச்சாட்டி ௸யாரால்பகவத் பஜனையில் பிரியமுடையகனவான்களெல்லவரும் வரும்படி. கடிதமூலமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டதின்மேல் நானும் ஒருவனாய் அவ்விடம் சென்றேன். அன்பர்களே! இதுவரையிலும்கேள்விப்பட்டிருந்ததற்குமுற்றும் விரோதமாகப்பிரார்த்தனையும் தாயுமானவர் பாடலும் கீர்த்தனங்களும்பிர்மதருமமும் முறையே படிக்கப்பட்டு ஒவ்வொருவரும் பொருள்கூறினர். ஒவ்வொருபாசமும்ரசிக்கத்தகுந்ததாயும் கேட்பவர்மனதுருகி பக்தியில்லாதவர்களுக்கும் பத்தி ஜெனிக்கும்படியானதாயிருந்ததை யெழுதின் விரியுமாதலால் முக்கியமானதைக்குறிப்பிடுகிறேன். மேற்குறித்த பிரமதருமத்தில் (சாதன சதுஷ்டயமடைந்தமுமுட்சு எத்தனையோவருடகாலம் பெரியோர்களிடத்தில் தொண்டுசெய்து அதன்மேல் அவர்கள்பக்குவம்பார்த்து உபதேசிக்கும் முக்தியடைவதற்குரிய சிறந்த தியானமார்க்க வழியாகியபிரணவமென்னும் ஓம் என்பதின் அர்த்தமும் அதை கருவியாகக்கொண்டு தியானிப்பதனல் விளையும்பிரயோஜனமும் தியானிக்கும் மார்கத்தையும் யாதொரு ஆடங்கமின்றி உபமானத்துடன் பாமரர்களுக்கும் விளங்கும் படியான எளியநடையில் சொன்னயம் பொருணயத்துடன் விளங்கவிவரித்துப்பின்னர் ஸதிரீகளுக்குரிய முக்கிய தர்மங்களின்னவை யென்றும் சொல்லி யித்தர்மாதர்மங்களை மிருகப்பிராயமாய் வைத்திருக்கும் நமது தேசஸ்திரீகள் கல்வி யறிவற்றவர்களா யிருப்பார்களாயின் எவ்வாறு மேற்கூறியவைகளை யறிந்து புருஷர்களுடன் ஐக்கியமடைந்து கற்பென்னும் தற்காப்பை யடைவார்களென்றும் எடுத்துச் சொன்னவுடன் என்மனதில் செவ்வையாய் போதப்பட்டதுபோல் அநேகர்களும் அறிந்திருப்பார்களென்பதில் எட்டுணையும் ஐயமுற இடமில்லையென நம்புகிறேன். கடைசியாய் அருளடக்கமென்னும்பிரார்த்தனையைப்படித்து அவர் ஆசனத்தில்உட்கார்ந்து பொதுவான சிலநன்மைகளை சிலர்எடுத்துப்பேசியபின்னர்மற்றஇரண்டொரு வாரம்வரையில் அவ்விடத்திற்றானே சபை கூடுவது சிலாக்கிய மெனச்சொல்லிக் கலைந்தனர்.

பட்டுக்கோட்டை ௧௮௯௭-௵ பிப்பரவரி௴ ௧௪௰	இங்ஙனம் கண்டு களித்தோன்

தஞ்சைநகர்தர்மசபை.

விஜயதெஸத்ருதிதிநரூஷா.

அக்ஷய ௵ மார்கழி௴ ௨௪௰ யாகிய நாயிற்றுக்கிழமையில் சங்கரசாஸ்திரி பிரசித்தப் படுத்தும்படி தெரிவித்துக் கொண்டதாவது.

மற்ற மதஸ்தர்களைப்போல் வேதசமாஜத்தார் கேவலம்வாசாயுக்தியினால் கல்லில்தெய்வம் இல்லையென்றும் அதுகளுக்குக் கையிருந்தும் நீட்டமடக்கக் கூடவில்லையென்றும் வாயிருந்தும்பேசவில்லையென்றும் இவைகளைப்போலொத்த துராக்ஷேபணைகளைச்செய்தால் வேத ஶாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்ட ஒருஹிந்துவின் காதிலாவது விழவே மாட்டாது. அதுகளின்பேரில்பதிலும்சொல்லமாட்டான்.

ஷையார்களின் முதலாவது விண்ணப்பபுஸ்தகம். ௧௩௭-வதுசைட்டின் அந்தியபாகத்தினுலும் ௧௩௮-வது சைட்டின ஆதிபாகத்தினுலும் சுருதியையும்; ௧௩௨-வது பக்கத்தில் "யஜ்ஞஶிஷ்டாஶினஸ்ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை:, புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத் இத்யாதி ஸ்ம்ருதியையும் ... ப்ராணேஷ்வாத்மநேஜுஹோதி ... ஸாம்யம் ... ந்யாயவித ..." என்ற ஆபஸ்தம்பஸ்மிருதி வசநத்தால் ஸ்மிருதிக்கு விரோதமில்லாதவனாயில் ஸ்மிருதியையும் புராணத்தையும் வேதசமாஜத்தார் நிஸ்ஸந்தேகமாய் ஒப்புக்கொண்டே சர்சிக்கத்தொடங்கி யிருக்கிருர்கள் என்பது ஸபஷ்டமாய் இருக்கிறது.

ஷை விண்ணப்பம்முதல் அத்தியாயத்திலுள்ளவற்றில் சிலநட்டாமுட்டிசுலோகங்களதவிர மற்றவையெல்லாம் ப்ரஹ்மஸூத்ர ப்ரதிபாதகமாயிருக்கிறது. அதைககாட்டிலும் ஆயிரமடங்கு அதிகமாய் சுருதியினாலும் ஸ்மிருதியினாலும் அனுபவத்தாலும் ப்ரஹ்மஸூத்ரத்தை ப்ரதிபாதிக்க அனேக ம்மகான்கள் இருக்கருர்கள். ஆனதால் முதல் அத்தியாம் ஆச்சரியகர முள்ளதல்ல.

ஷை ௧௩௬-வது சைட்டில்சுருதியிலுள்ள ஒரு அக்ஷரத்தையாவது பூர்வபக்ஷம் செய்ய அதிகார மில்லையென்றுசமாஜத்தார் அதற்கடுத்த கீழ்வரியில் சுருதியில் உள்ளகர்மங்கள் அப்பிரதான மென்று எப்படி சொல்லத் துணிந்தார்களோ தெரியவில்லை. மேலும் அவர்கள். ௧௪௪வதுபக்கத்தின் அந்தியபாகத்தினால் வேதத்தை அநாதயென்று ஒப்புக்கொள்ளுகிருர்கள். ௧௩௫-வது பக்கத்திலுள்ள "க்ருதே ஷோடஶநவாயஜ்ஞாஸ்தே த்ரேதாயாம் தஶைவஹி, த்வாபரே ஶம்வஷிவிதா, கலௌவாராஶரஸ்ம்ருதி:" என்கிறவாக்கியத்தினால்பிரகிருதகலியுகத்துக்குவாராஶரஸ்மிருதியின் முதலாவதுஅத்தியாயத்திலுள்ள "சதுர்ணாமபிவர்ணானாம் ஆசாரோதர்மபாலக:, ஆசாரப்ரஷ்டதேஹானாம் பவேத்தர்ம: பராங்முக:, ஷட்கர்மாபிரதோநித்யம் தேவதாதிதிபூஜக:, ஹுதஶேஷந்து புஞ்ஜாநோ ப்ராஹ்மணோ நாவஸீததி ஸந்த்யா ஸ்நாநம் ஜபோஹோமோ தேவதாநாம் ச பூஜநம், ஆதித்யம் வைஶ்வதேவம்ச ஷட்கர்மாணி திநேதிநே, க்ஷத்ரியோஹி ப்ரஜாரக்ஷந் ஶஸ்த்ரபாணி: ப்ரதண்டவாந், நிர்ஜித்ய பரஸைந்யாநி க்ஷிதிம் தர்மேண பாலயேத், ... நயாச்சைவ ... க்ருஷிகர்ம வாணிஜ்யம் வைஶ்யவ்ருத்திருதாஹ்ருதா. ஶூத்ரஸ்ய த்விஜஶுஶ்ரூஷா பரமோதர்ம உச்யதே. அந்யதா குருதே கிஞ்சித் தத்பவேத் தஸ்ய நிஷ்பலம்" என்றவாக்கியத்தினால் நான்குவர்ணங்களும்ஒவ்வொருவர்ணத்தார்செய்யவேண்டிய கர்மபலஙகளும் வியக்தமாயிருக்கிறது.

தேவதாநாம்சபூஜநம் என்னும்வாக்கியத்தினால் பிராமணன் செய்யவேண்டிய கர்மங்களில் அர்ச்சை ஒன்ரு யிருக்கிறதென்றும் சூத்திரன் பிராமண சுசுருஷையைத்தவிற வேறென்றையும் செய்யக்கூடாதென்றும் செய்தால் பலமில்லையென்றும் ஏற்பட்டிருக்கிறது. இந்தவிதி சுருதியிலுள்ள இன்னவாக்கியத்தினால் விரோதப் படுகிறதென்று ஷைசமாஜத்தார்காட்டினால் அல்லாமல் முதலாவது விண்ணப்பபுஸ்தசம். ௬-வது சைட்டில் சூத்திரரும் சர்வத்துக்கு அதிகாரியென்பதையேற்றுகொள்ளலாமா. மேலும் ஷை விண்ணப்பபுஸ்தகம். ௧௪0-வது சைட்டில் அர்ச்சைக்கு ஸ்மிருதியில் பிரமாணம் காட்டினால் அப்போதுயோசிக்கிறோம்என்றுசொல்லப்பட்டிருக்கிறதே. மேலேகண்டதேவதாநாம்சபூஜநம் என்ற வாக்கியத்துக்கு என்னபொருள் கொண்டார்களோ தெரியவில்லை. கருமங்களுக்குப் பலன் இன்னதென்று சொல்லாமலும் கருமத்தினால், மோட்சம் வருகிறதில்லையென்று சொல்லியு மிருந்தாலும் அர்ச்சை முதலான தர்மங்களை அனுஷ்டானம்செய்யவேணும்என்றும், செய்யாவிட்டால் பாதித்தியம் உண்டென்றும் சுருதியினாலும் ஸ்மிருதியினாலும் வியக்தமாயிருக்கிறதென்றுஎல்லாருக்கும்தெரிகையில்.மூர்த்திஉபாசனைகூடாதென்று சாவித்ருமூலமாய்மெய்ப்பிக்கக்கடைமைப் பட்டிருக்கிறஷை

சமாஜத்தார் அதுவிஷயத்தைப்பற்றி என்ன காரணத்தினாலே ௫-வது அத்தியாயத்தில் அனேகம் யுக்திவாதங்களைமட்டும் பேசியிருக்கிறார்கள். வேதத்தில் சொல்லியிராத சங்கதியை ஸ்மிருதியிலாவது புராணங்களிலாவது சொல்லியிருந்தால் அதுசுருதி விரோதமாகமாட்டாது என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். வேதத்தில் சொல்லியிருக்கும் ஒருசங்கதிக்கேவேறுபட்டானவழியினால் அந்தசங்கதியைப்பற்றி ஸ்மிருதி புராணங்களில் சொல்லிஇருந்தால் அதுவிரோதமாகும் இந்த சங்கதி ஆபஸ்தம்ப ஸ்மிருதிவசநத்தால் ஸ்பஷ்டமாயிருக்கிறது.

மற்றவைகளை அடுத்தநாயிற்றுக்கிழமையில் சர்ச்சிக்கிறேன்.

ஓ. சங்கரசாஸ்திரி.

௧௮௯௭ம் ௵ ஜனவரி௴ ௧௧௨ } தர்மசபா காரியதரிசி குமாரகிஷ்ணசாஸ்திரி.

தர்மசபையார்க்கோர்விடை.

ம-ா-ா-ஸ்ரீ - கனம்பொருந்தியபத்திராதிபருக்கு

ஐயா

இதனடியில்யான் வரையுஞ் சிலவரிகளைத்தங்களாதரணையி லிருக்கு மென்தாயாகிய சிறப்புப்பொருந்திய தத்துவபோதினி இடம் சேர்ப்பீர்களென வணக்கத்துடன் பிராத்திக்கிறேன்.

"సత్యమేవజయతేనానృతం" என்னும்வேதவாக்கியத்தையேசிரோபூஷணமாகவகித்துஎத்திசைக்குஞ்சென்று அவாங்மனசகோசரமானநித்தியப்பிரமத்தின் சத்தியமானதத்துவங்களையாவருக்கும் போதித்துபிரதிமாதம் தவறாமலென்னிடமும்வந்தெனக்குள் குடிகொண்டிருந்தஅஞ்ஞானகிருத்தியங்களனைத்தையும் விடுவித்து என்மனோவாக்காயம்சுத்தமடையத்தக்கசத்தியக்கியானத்தைககருணையுடன் போதித்துவரும் என்பிரியமுள்ள தாயாகியதத்துவபோதினியே! இந்தமாதம்நீஎன்னிடம்வரும்போதுஉன்னுடனழைத்துவந்த "విజయతేసత్యమితినమృతః" என்னும் துவஜத்தையுடையவோர்சீமாட்டிதஞ்சைநகர்தர்மசபைகாரியதரிசி குமார கிருஷ்ணசாஸ்திரி என்று கையொப்பமிட்டமூப்பத்துமூன்றுவினாக்களடங்கிய ஓர்பத்திரிகையையெனக்குத்தந்தனள். அவ்வினாக்களனைத்தையும் நான்கண்ணோக்கமிட அவைகள் முற்றும்பிசகானவைகளென்று எனக்கு புலப்பட்டன. அதற்கு திருட்டாந்திரமாசசிலவற்றை உனக்குஎடுத்துக் காட்டுகிறேன்.

அதாவது. உன்சிரோபூஷணமாகிய "సత్యమేవజయతేనానృతం" என்னும்வாக்கியம் வேதத்தைநன்றாய்ப்பார்த்தவருக்குந்தெரியவேண்டியிருக்க அதைப்பற்றி வினாவினோர்ஆக்ஷேபித்திருப்பதினால் அவர்வேதங்களை நன்றாய் பார்த்தவரல்லவோவென்று சந்தேகங்கொள்ளவேண்டியிருக்கின்றது.

அவரது (௯) வினாவிற்கு விடைவேதஸமாஜகண்டனத்தி லறியவேண்டிய தாயிருக்க வேதஸமாஜத்தாரை அவர்கேட்டது வெகுபுதுமை. அந்தகண்டகர் ஆதாரத்தைக்கொண்டோ இல்லாமலோதானே அர்ச்சையேபிரமம் பிரமமே அர்ச்சையென்று எழுதியிருக்கிறார்.

மேலும். ஒருவியவஹாரத்தில் பிரதிவாதிக்கூடவேண்டிய ஸாக்ஷியத்தை வாதிக்காதாரமானதஸ்தாவேஜிலிருந்துஎடுத்துக்காட்டினால் பிரதிவாதியின் கக்ஷிபலந்தானே, அவ்வாறேவேதஸமாஜத்தாருக்கு எதிரியாயிருந்த கும்பகோணத்துவித்துவான் எதை தன்கக்ஷியாகிய விக்கிரஹ ஆராதனத்திற்கு ஆதாரமாககுறிப்பிட்டிருக்கிறாரோ அப்புராணாதிகளிலும் விக்கிரக ஆராதனைசெய்யக்கூடாதென்பதற்கு ஆதார மிருக்கின்றதென்று யெடுத்துக்காட்டியிருப்பதாய் வெதஸமாஜவிண்ணப்பத்தின் மூன்றாவது சைட்முதல் (௭௩) சைட்வரையில் வாசிப்பவர்களுக்கு கிராஹியமாகிறதும்தவிர; அதேவிண்ணப்பத்தின் (௭௩) சைடிலும "இனி எங்கள் கக்ஷிக்காதாரமான கவுரவபிரமாணங்களை சற்று விசாரிப்போம்" என்று குறிப்பிட்டு அவர்களது கக்ஷியாகிய விக்கிரகாராதனை கூடாதென்பதற்கு அதே விண்ணப்பத்தில். (௭௩) வதுசைடிலுமின்னும் பலவிடங்களிலுமனேகவேதசுரு

திகளை உதகரித்திருக்க, முழுபூசினிக்கா
யை ஒருசாதத்திலமறைப்பதுபோல வி
னுவுவோர், வேதசமாஜத்தார் "அப்பிர
மாணமென்று சொல்லும் புராணங்களி
லிருந்து, ஆராதனைசெய்யக்கூடாதென்ப
தற்கு பிரமாணமெடுத்துக்காட்டியிருக்கி
றீர்களென்றும் அப்படிசெய்யக்கூடாதெ
ன்று வேதத்திலிருந்து எடுத்துக்காட்ட
வில்லையென்றும் விக்கிரகாராதனைசெய்ய
க்கூடாதென்று வேதத்தில பிரமாண மி
ருந்து எடுத்துகாட்டினல் வினுவுவோரே
தோபின்னிட்டு சாதித்து விடுவதாயும்"
வீண்வீராப்பான (௩௧ - ௩௨-௩௩-)வது
வினக்களில் குறிப்பிட்டிருப்பதை யோ
சிக்குமிடத்து ஷெயார் தஞ்சைமுன்சீப்
கோர்ட்டு வக்கீலாதலால் விண்ணப்பத்தி
லுள்ளதை இல்லை என்றுமறுத்தால் விக்கி
ரஹாராதனைகூடாதென்பதற்கு தெளிவா
னநியாயம்வெளியாகு மென்றே அல்
லது. என்னைப்போன்றபாமர ஜனங்களை
பிரமிக்கச்செய்யவோ அல்லதுசாதாரண
மான வசனநடையில் எழுதியிருக்கும்
வேதசமாஜ விண்ணப்பத்திலிருக்கும் தா
த்பரியத்தை கிரிஹிககசக்தியற்றே அவ்
வாறான வினக்களை வரைந்திருக்கிற ரெ
ன்று ஊகிக்கவேண்டியதாயிருக்கின்றது.

இதுவுமல்லாமல் ஷெயார் கேட்டிருக்
கும் (உ௮) வது வினுவில் இப்போப்பட்
ட சாதுக்களுக்கு மாதாபிதாமனைவிபிள்
ளைகள் சரிதானு" என்று எழுதியிருக்கி
றார். அதின்தாதபரியம்வினுவுவோருக்கு
த்தவிர இதராளுக்கு தெளிவாய்ஹாவமா
வது அருமையே. ஆயினும் கடவுளின
ல் சர்வப்பிராணிகளுக்கும் பொதுவாய்
ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதிகளாகிய
ஆகாரம், நித்திரை, மைதுனமுதலியவை
களை நிவர்த்தி செய்தவர்கள்தான் சாதுக்
களென்று மதித்திருப்பவர்களில் அவர்
வொருவராய்புலப்படுகின்றனர் அவ்வண்
ணமிருக்குமாயின் மெல்குறித்த சுபாவத
ர்மங்களை விட்டிருக்கு மொருவனையாவ
து சீவகோடிகளில் காண்பது அரிதே,
அந்ததர்மங்களை விட்டிருப்பவர்கள்தான்
சாதுக்களென்று சித்தாந்தமாகும்பக்ஷத்
தில், தாய்தந்தை மனைவிமக்களுடன் வா

ழ்ந்திருந்து சாதுக்களென்று யாவராலு
ம் மதிக்கப்பட்டிருந்தவசிஷ்டர் பராசர்
வியாசர்ஜனகர்முதலான வர்களை அசாது
க்களென்றே மதிக்கவேண்டிய தல்லவா.
ஆதலால் வினுவு வோரினி இவ்வாறாக
அப்பிரயோஜனமான வினக்களை காயித
த்திற்கு சேடாக வேதசமாஜத்தாருக்கு
எழுதிசண்டையிட எத்தனிப்பதைவிட்
டு அக்கனவான்எந்த வழியைசத்தியமெ
ன்றுணர்ந்தியிருக்கிறாரோ அதைஓர்பத்தி
ரிக்கையை ஸ்த்தாபித்து அதின்மூலமாக
வாவது அல்லது வோர் கிரந்தமாகவாவ
து எழுதி பிரசுரம் செய்வாராகில் வெகு
ஜனப்பிரயோசன மாகவிருக்கு மென்று
னக்குத்தெரிவிக்கும்.

௬அ௬௬-(வரு) பிப்பிரவரிமீ ௧௩௨.	உன்புத்திரன், உண்மையறிய விரும்புவோன்.

இதிஹாஸகல்பனை.

தொடர்ச்சி.

பு-௩, இ-௧0, ப-௧அ௬.

அவற்றுள்பலவிஷயங்கள் பொய்யெ
ன்பதற்குள்ள திருஷ்டாந்தம் இராமரும்
இராவணனும் சண்டைபண்ணினபொழு
து போர்க்களத்தில் இராமர்பக்கஞ்சேர்ந்
தசேனை எழுபது வெள்ளக்குரங்குகளும்,
இராவணன்பக்கத்தில்சேர்ந்தது ஆயிரவெ
ள்ளமூலபலங்களும் அநேகவெள்ளஇரா
க்ஷதரும் என்றுஇராமாயணத்திற்சொல்
லப்பட்டிருக்கிறது. இராமரோடும் இரா
வணனோடும்சேர்ந்திருந்ததாகச் சொல்ல
ப்பட்ட பெரியசேனைகள் இலங்கைத்தீவி
லே அல்லது முழுப்பூமியிலே ஒன்றின்
மேல் ஒன்றாய்ப் படைப்படையாய் அடு
க்கினலும் கட்டுக்கதையிற் கூடியதாய்
க்காணப்படுகிற மகாமேருமலையின் உய
ரத்தையும் சூரியனுடைய உயரத்தையும்
தாண்டுமென்றறியலாம். அதுவுமல்லாம
ல்எண்ணாயிரமயிலிடமுள்ளஓர் உண்டை
யாகியநம்முடைய பூமிமுழுவதும் மண
லாற்றிரட்டப்பட்டதென நினைத்துக்கொ
ண்டாலும் அந்தமணற்றொகைமுழுவது
ம் சேனைகளின்தொகைக்குச் சரிக்கட்டா

று. இவ்வகைப்பட்ட இராக்ஷதகரடிக்குரங்குக்கூட்டங்கள் இலங்கைத்தீவிலே ஒருமூலையில்நின்றதென்பது நம்பக்கூடுமா? ஆர்தான் இப்படிக்கொத்த நகைப்பானவீண்காரியத்தை உண்மையென்றுகூறுகிற புத்தகங்களை தேவமூலமாய்வந்ததென்று ஏற்றுக்கொள்வான். இராமனும்இராவணனும் யுத்தம்நடத்தின இலங்கைத்தீவிலவ்விடத்திலே எழுபதுவெள்ளக்குரங்குகளும் அடங்கக்கூடுமென்று யோசனைபண்ணுவோம்.

இங்கிலீஷ்காரர் நுட்பமாய்அளந்து கண்டபடி இலங்கைத்தீவின்சதுர அளவு௨௭௭0 மயில் அக்குரங்குகள் ஒவ்வொன்றும் ஓரடிநீளம் ஓரடிஅகலம் ஓரடிஉயரமுள்ள இடத்தில் இருக்கக்கூடுமென்று நினைத்துக்கொண்டு இலங்கைத்தீவுமுழுவதிலும் எத்தனைக்குரங்குகள் இருக்கலாமென்று பார்க்கிறதற்கு சொல்லப்பட்ட - ௨0௭௭0 - சதுரமயிலைச்சதுரஅடியாக்கினால் - ௫௭௯0௩௪௩௬௮000. அப்பொழுது இலங்கைத்திவு முழுவதிலும் மிகவும் நெருக்கமாகிலும் இருக்கக்கூடியகுரங்குகள் முன்கண்ட சதுரடிகளெவ்வளவோ அவ்வளவே. இவ்விதமாயிருக்கில் எழுபது வெள்ளக்குரங்குகளும் இருக்கக்கூடாது ஆகையால் அவைகளை யொன்றின்மேலொன்றாய்ப் படைப்படையாய் அடுக்கினால் ஆசஎத்தனைப்படையாயிருக்குமென்று அறிகிறதற்கு முன்சொல்லப்பட்ட எழுபதுவெள்ளத்தை - ௫௭தூ௯ா௩கோடியே ௪௩ாதூ௬அதூத்துக்கீந்து கண்டபடை-௧- மகாதாமரையே ௩யொதூ ௮௯தூ௯௨ தாமரையே - ௪௩ாதூ ௮அதூாக - மகாசமுத்திரமே ௨௬ாதூ ௩தூ௩ா௮௩-சமுத்திரமே. ௧௫ ௫௩௧௫௫ மகாபதுமமே ௩௧௫௫௭௯௩பதுமமே ௨௬௯௫ ௫௩௭மகாவிந்தமே ௬௮௫௨ ௫௬௮விந்தமே ௭0௯௨௧௭௬ மகாசங்கே, ௧௯௩௫ ௮௯௯சங்கே ௪௫௯௪௨௫௫மகாகோடியே ௨௪௧௧௬௭௩கோடியே ௮௩௯௭௪ இதுஎவ்வளவு மயில்தூரமாயிருக்குமெனில்-௨௨௮௯௬00-மகாசமுத்திரமே ௮௪௬௮௩௭. சமுத்திரமே-௩௫௯௯௧௨௩ - மகாபதுமமே ௯௭௫ ௯௭௬பதுமமே ௩௬௮ ௪௨௨௩மகாவிந்தமே ௬௩ ௯௯௧௩௧விந்தமே ௧௫௮௮௪௬௩மகாசங்கே௩௨௭௩0 ௯௩சங்கே ௯௨0௩௫௨௧ மகாகோடியே. ௬௩௯௨௫0௨கோடியே ௨௧0௮௧௧௩. ஒருயோசனை-௧0-மயிலுக்குச் சரியாயிருக்குமென்று நினைத்துக்கொண்டுஇவ்வளவுமயிலையும்யோசனையாக்கினால் - ௨௨௮௩௬0 - மகாசமுத்திரமே - ௮௪0௬ ௮௩-சமுத்திரமே-௭௩௫௯௯௧௨. மகாபதுமமே-௩0௯௨௫௯௭-பதுமமே-௬௩௬௮௪௨௨-மகாவிந்தமே-௨௬௩௯௧௧௩-விந்தமே-௧௧௫௮௮௪௬ - மகாசங்கே-௩௩௨௭௩0௯-சங்கே-௩௯௨0௩௫௨ - மகாகோடியே-௧௬௩௯௨௫0-கோடியே-௨௨௧0௮௧௧ யோசனைதூரமாம். இனிப்பூமியின்மேல் ௪௮000-யோசனை உயரமுள்ள மகாமேருமலையைபார்க்கிலும் எத்தனைதாமயரமாயிருக்குமென்று அறியும்படி யோசனை அவ்வளவையும் ௪௮000-யோசனைக்கியந்து - ௪௭ - மகாசமுத்திரமே - ௭000௧௭௫சமுத்திரமே-௧௪௨௪௪௪௯- மகாபதுமமே-௯௮௧௭௩௧௧-பதுமமே-௯௯௯௫0௭௬ மகாவிந்தமே -௭௫௪௬௩௮௩விந்தமே - ௩௧௫௩௩௨௪ மகாசங்கே-௭௫௯௬௫௨௬ - சங்கே-௫௨௨௭௯00-மகாகோடியே - ௭௩௩௬௭௪கொடியே-௮௪௩௭௯௬0 - தரமென்று அறியலாம்.

முன்சொல்லப்பட்ட காரியங்களினால் அந்த எழுபதுவெள்ளக்குரங்குகளும் இவ்வகைத்தீவில் அடங்காதெனவிளங்கும்.

தொடர்ந்துவரும்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரமம், சாந்திபூர்ணம், அமிருதம், அது உருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார். மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் ,பதிப்பிக்கப்பட்டது.